

## 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

## கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**25-03-2024, திங்கள்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | மாலை 5.00 மணி | பெரியார் தூண், காந்தி சாலை, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | காஞ்சிபுரம் |
| 2 | மாலை 6.00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மார்க்கெட் அருகில், செய்யாறு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 3 | இரவு 7.00 மணி | காமராஜர் சிலை, பழைய பேருந்து நிலையம் அருகில், வந்தவாசி, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 4 | இரவு 8.00 மணி | காமராஜர் சிலை அருகில், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 5 | இரவு 9.00 மணி | பேருந்து நிலையம் அருகில், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |

**26-03-2024, செவ்வாய்க்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| மதிய உணவு இடைவேளை | | | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.

தென்காசி தெற்கு மாவட்ட

# ‘இந்தியா’ கூட்டணிக் கட்சி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்பு!

தென்காசி.மார்ச்.25-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இந்தியா கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம் தென்காசி இலஞ்சி சாரதாம்பா ஹாலில் வைத்து தென்காசி தெற்கு மாவட்ட அவைத்தலைவர் சுந்தரமகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை பொதுக்குழு உறுப்பினர் அருள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தென்காசி நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க.வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பேசியதாவது.

தென்காசி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.அவரது வெற்றியை உறுதி செய்யும் வகையில் கழக நிர்வாகிகள்,கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.

மக்களுக்குத் தேவையான அடிப்படை பணிகள் மற்றும் அறிவுப்பூர்வமாகவும் அவர் செயல்படுவார்.

வருகிற 27.03.2024 (புதன்கிழமை) முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென்காசி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஸ்ரீவில்லி புத்தூரில் வைத்து நடைபெறும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் கலந்துகொண்டு பரப்புரை ஆற்றுகிறார்கள்.2 பாராளுமன்ற தொகுதிகளுக்கு சேர்த்து ஒரே இடத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்.

எனவே வருகிற 27 ஆம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெறக்கூடிய மாபெரும் இந்தியா கூட்டணி பொதுக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள்,தொண்டர்கள், இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

இந்நிகழ்வில் தனுஷ் எம்.குமார் எம்.பி. மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, தமிழ்ச்செல்வன், மாவட்டப் பொருளாளர் ஷெரிப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, முத்துப்பாண்டி, சேக் தாவூது, ஆறுமுகசாமி,சேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஷ்வரன், சாமிதுரை,ரஹீம், தமிழ்ச்செல்வி,ஒன்றிய செயலாளர் கள் சீனித்துரை, திவான் ஒலி, அழகு சுந்தரம், ரவிசங்கர்,ஜெயக்குமார், சுரேஷ், நகரச் செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், பேரூர் செயலாளர் குட்டி, சுடலை,முத்தையா, பண்டாரம்,ராஜராஜன்,முத்து, வெள்ளத்துரை, உசேன், சிதம்பரம், கோபால்,முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் காசிதர்மம் துரை,

ராமையா,தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா,

கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், வழக்கறிஞர் வேலுச்சாமி மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, தங்கராஜ் பாண்டியன்,ரமேஷ்,கோமதிநாயகம், இஞ்சி இஸ்மாயில், இசக்கி பாண்டியன், அண்ணாமலை, சுப்பையா, வீராணம் சேக் முகமது, ஹமீம் இப்ராஹிம், ரமேஷ், சங்கர நயினார், முத்துக்குமார், துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், சிவக்குமார், சுப்பிர மணியன், அப்துல் ரஹீம், வழக்கறிஞர்கள் முருகன், முத்துக்குமாரசாமி, ராஜேந்திரன், ராமராஜ், கஜேந்திரன்,பேரூராட்சி தலைவர்கள் சுந்தர்ராஜன், வேணி வீரபாண்டி, சின்னத்தாய், சீதாலட்சுமி முத்து, ஊராட்சி மன்ற தலைவர் வேலுச்சாமி,சத்யராஜ், உள்பட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி தொகுதி கழக வேட்பாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. இன்று திருச்செந்தூரில் வாக்கு சேகரிக்கிறார்!

## தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, மார்ச் 25-

தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி தி.மு.க வேட்பாளர் கனிமொழி கருணாநிதிதிருச்செந்தூரில் வாக்கு சேகரிப்பு சுற்றுபயணம் செய்கிறார். மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையில் அமைந்துள்ள INDIA கூட்டணியின், தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி தி.மு.க வெற்றி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி வாக்காளர்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்கும் பணி இன்று (25.03.2024 - திங்கள்கிழமை) மாலை 4 மணிக்கு திருச்செந்தூரில் துவங்க உள்ளது. INDIA கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளின் தலைவர்கள், பொறுப்பாளர்கள் வேட்பாளருடன் வருகின்றனர்.

திருச்செந்தூர் நகராட்சி தேரடி திடலில் துவங்கி முத்தாரம்மன் கோயில் தெரு, தோப்பூர் பகுதி, அமலிநகர், ஆலந்தலை ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரிக்கவுள்ளார்.

அதனை தொடர்ந்து திருச்செந்தூர் ஒன்றியம் மேலத்திருச்செந்தூர் ஊராட்சி நா.முத்தையாபுரம், அம்பேத்கர் சிலை அருகிலும், பிச்சிவிளை காமராஜர்சிலை, காயாமொழி பஜாரிலும், பூச்சிக்காடு ஊராட்சியிலும், சோனகன்விளை, சண்முகபுரம் வழியாக வீரபாண்டியன்பட்டணம், அடைக்கலாபுரம், மூலக்காரை, நல்லூர் ஆகிய பகுதிகளில் மக்களை நேரடியாக சந்தித்து வாக்கு சேகரித்து அம்மன்புரத்தில் நிறைவு பெறுகிறது. வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சிகளை மிக சிறப்பான முறையில் வெற்றிபெறச் செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட வேண்டுகிறோம். மேலும் கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தேர்தல் பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், இளைஞர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், சிறு தொழில் முனைவோர்கள், ஊர் பெரியோர்கள், தாய்மார்கள் பெரும் திரளாக பங்கேற்பதோடு பேராதரவு தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்- அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சி.பி.எஸ்.இ. 3, 6-ம் வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டம்!

புதுடெல்லி, மார்ச் 25-

சி.பி.எஸ்.இ 3 மற்றும் 6ம் வகுப்புகளுக்கு புதிய பாடத்திட்டம் மற்றும் பாட நூல்களைத் தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் அவை விரைவில் வெளிடப்படும் என்றும் மத்திய இடைநிலை கல்வி வாரியத்திடம் தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.இ.ஆர்டி) தெரிவித்து உள்ளது. இந்த் தகவலை சி.பி.எஸ்.இ. பள்ளிகளிடம் மத்திய இடைநிலை கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சி.பி. எஸ்.இ.இயக்குனர் ஜோசப் இமானுவேல் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு வரை என்.சி.இ.ஆர்.டி. வெளியிட்ட பாடநூல்களுக்குப் பதிலாக 3 மற்றும் 6ம் வகுப்புகளுக்கு என்.சி.இ.ஆர்.டி. வெளியிட உள்ள புதிய பாடத் திட்டம் மற்றும் பாடநூல்களைப் பின்பற்றுமாறு சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் வேறு எந்த வகுப்புக்கும் ஏப்ரல் 1 முதல் தொடங்கும் புதிய கல்வியாண்டில் பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களில் மாற்றம் இருக்காது என்று தெரிவித்தார்.



நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி தேரடி பகுதியில் I.N.D.I.A கூட்டணியின் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் 20.03.2024 அன்று மாலை நடைபெற்றது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான திருமதி. பி.கீதாஜீவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி மாநகர மாவட்ட தலைவர் முரளிதரன், சமத்துவ மக்கள் கழக மாவட்ட செயலாளர் அற்புதராஜ், மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணை மேயர் திருமதி ஜெனிட்டா செல்வராஜ், தலைமைக் கழக பேச்சாளர் சரவெடி சரத் பாலா, மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் துறைமுகம் பிளாரன்ஸ், பொதுக்குழு உறுப்பினர் திருமதி. கஸ்தூரி தங்கம், மாநகராட்சி மண்டல தலைவர் நிர்மல்ராஜ், பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், சுரேஷ்குமார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஜெயசீலி, திருமதி பவானி மார்ஷல், திருமதி.மெட்டில்டா, திருமதி, நாகேஸ்வரி, மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தேனி மாவட்டம், தேனியில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளுடன் தேனி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றினார். இதில் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., மகாராஜன் எம். எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., போடி தொகுதி பொறுப்பாளர் ஜெயன், மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லப்பாண்டி, மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.